எம் பணியின் நோக்கம்

வேதத்தின் சாராக விளங்கும் திருமுறை இறை பக்தியின் இன்பத்தை அழகுத் தமிழில் சித்தரிக்கும் பாடல்களாகும். திருமுறை பக்தனின் மனதில் ஊற்றெடுக்கும்  இறை அனுபவத்தை படம் போட்டுக் காட்டும் இலக்கிய இன்பம்.

திருமுறையின் அருமையை ஆலயங்களிலும், வீடுகளிலும் பேணுவதும், பரப்புவதும் எங்கள் நோக்கமாகும். இளைஞர்களுக்கு திருமுறையின் உட்கருத்தை  விளக்குவதன் மூலம் அவர்கள் சைவப் பண்பாட்டுடன் வாழ திருமுறை உயிர்த்துணையாக இருக்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

## எழுச்சி வாசகம்:

**திருமுறையே எம் உயிர்த்துணை என்பதற்கிணங்க அருளாளர்களுடய இறைவாக்கு தமிழ் மறையாக போற்றி பேணுதல் எமது தலையாய கடன்.**

**இளைஞர்களுக்கு அதன் உட்கருத்தை விளக்குவதன் மூலம் சைவ நெறியில் ஒழுகுவதற்கான சூழலை ஏற்படுத்தும் உன்னதமான முயற்சியே இவ்விழாவின் நோக்கம்.**

திருவுருள்மிக்க அபிதகுஜாம்பாள் சமேத அருணாசலேஸ்வரப் பெருமானின் கருணையாலும் அவரது ஆணையாலும் இடம்பெருகின்ற அனைத்துலக இரண்டாம் திருமுறை மாநாட்டிற்கு வந்துள்ள சிவனடியார்களே உங்களுக்கு பணிவான வணக்கம்.

ஞநிவநஅடிநச மாதம் 19ம், 20ம், 21ம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தப் புண்ணியப் பணியை இலண்டன்  சிவன் கோயிலின் ஆதரவுடன செய்ய வாய்புக்கிடைத்தமைக்கு மாநாட்டு ஏற்பாட்டுக் குழு மிகவும் பெருமைப்படுகிறது,

இருபத்து ஏழு  இறையருளாளர்களால் பாடப்பெற்றவை பன்னிரு திருமுறைகள். ஈழநாட்டின் இரண்டு சிவாலயங்களையும் தமிழ்நாட்டின் காவிரிக் கரைகளிலும், அதற்கப்பால் உள்ள சிவன் கோயில்களையும், கயிலாயத்தையும்  சிறப்பித்துப்

போற்றும் பாடல்களின் தொகுப்பு திருமுறைகளாகும். ஆயிரக்கணக்கான திருமுறைப் பாடல்கள் காலத்தால் அழிந்து போயின. இன்று எங்களுக்குக் கிடைத்துள்ளவை, எஞ்சியிருப்பவை 276 சிவாலயங்களைப் புகழ்ந்து பாடப்பெற்ற 18.200 திருமுறைகள் மட்டுமே.

இவ்வாறு எஞ்சியிருந்த அரும்பெருஞ் செல்வமான அருட்பாடல்களை பதினொரு திருமுறைகளாக வரிசைப்படுத்தி அமைத்துத் தந்தவர் 10ம் நூற்றாண்டைச் சேர்ந்த நம்பியாண்டார்நம்பி அடிகளாவார். இவர் திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையாரின் திருவருளால் இந்தப் புண்ணியப் பணியைச் செய்தார்.

பதினொரு திருமுறைகளாக இருந்த அருட்பாடல்கள் 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் எழுதிய பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்துடன் பன்னிரு திருமுறைகளாகத் திகழ்கிறது.

1133-1150 ஆண்டுகளில் அரசு செய்த இரண்டாம் குலோத்துங்க சோழ மன்னனின் முதலமைச்சராக இருந்தவர் சேக்கிழார் பெருமான். அவருடைய இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும்.. போர்ச் சூழல்கள் அகன்று சீரும் செழிப்புமாக இருந்த தமிழகத்தின் இக்காலப்பகுதியில் குலோத்துங்க மன்னன் சிருங்கார ரசனை அதிகமுள்ள சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களைப் படித்து அனுபவித்து மகிழ்ந்து வந்ததைக் கண்டார் அவனுடைய முதலமைச்சர் அருண்மொழித்தேவர்

சிற்றின்ப இலக்கியங்களால் மனம் ஈர்க்கப்பட்ட இரண்டாம் குலோத்துங்கச் சோழப் பேரரசனை இறையருள் மிக்க நூல்களில் ஈடுபடச் செய்த பெருமை அருண்மொமித்தேவராகிய சேக்கிழாரைச் சேரும். சிவனடியார்களின் அருமையையும் சிவபெருமானின் அன்பையும் விளக்கிச் சொன்ன தனது முதலமைச்சரிடம் அடியார் பெருமையை அழகுத் தமிழில் எழுதும் பணியை ஒப்புவித்தான் மன்னன்.

மன்னின் வேண்டுகோளின் படி சிதம்பரம் நடராஜப் பெருமானின் திருவருளால் ‘‘உலகெலாம்’’ என அடியெடுத்துக் கொடுக்கப் பெற்று எழுதப்பட்ட பக்தி இலக்கிய நூலைக் கேட்ட மன்னன் தெய்வப் புலவர் சேக்கிழாருக்கு ‘‘உத்தம சோழப் பல்லவார்’’ என்ற சிறப்புப்பட்டத்தை அளித்து பெருமை செய்தான். சேக்கிழாரின் பெரிய புராணம் அன்று முதல் திருமுறைகளின் வரிசையில் பன்னிரண்டாவதாக வைத்து ரோற்றப்படுகிறது.